

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2023) புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் தன்னை சந்திக்க வருகை தந்த டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு, ‘உங்களில் ஒருவன்’ நூலின் ஆங்கில பதிப்பான “One Among You” நூலினை வழங்கினார். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன் எம்.பி., ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ராகவ் சத்தா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.12.2023) புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில், தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் நாடாளுமன்ற கழக குழுத் தலைவர் டி.ஆர். பாலு, தயாநிதிமாறன் எம்.பி., ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ராகவ் சத்தா ஆகியோர் உள்ளனர்.

### ஒன்றியக் குழுவினர் தூத்துக்குடியில் ஆய்வுக்கு வருகை!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று தூத்துக்குடி செல்கிறார்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, டிச. 20–**

**மத்தியக் குழுவினர் தூத்துக்குடியில் ஆய்வுக்கு வருவதால் – முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தூத்துக்குடிக்குச் சென்று ஆய்வு மேற்கொள்கிறார் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

அதன் விபரம் வருமாறு:-

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பெய்த கனமழையின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்ளவும், மக்களுக்குத் தேவையான மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் அமைச்சர் பெருமக்கள் மற்றும் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களும் உடனடியாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

மேலும், அப்பகுதிகளில் மாநில பேரிடர் மீட்புக் குழு, தேசிய பேரிடர் மீட்புக் குழு, தீயணைப்புத் துறை, காவல் துறையினர் மற்றும் அனைத்து அரசுத் துறைகளுடன் இணைந்து ஒருங்கிணைந்த முறையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு வருகிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் முன்னதாக நேற்று (20.12.2023) தூத்துக்குடிக்குச் செல்வதாக அறிவித்திருந்த முதலமைச்சர் அவர்கள், மத்தியக் குழு நேற்று தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்வதால், மாவட்ட நிர்வாகம் அவர்களுக்கு உடனிருக்க வேண்டிய நிலையைக் கருத்தில் கொண்டு, நேற்று இரவு மதுரை சென்று இன்று (21.12.2023) தூத்துக்குடியில் ஆய்வு மேற்கொள்கிறார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கழகத்தின் கொள்கைத் தூண் – இனமானப்

# பேராசிரியரின் நீங்கா நினைவுகளை நெஞ்சிலேந்துவோம்!

## பிறந்த நாளையொட்டி - முதல்வர் மு.க. ஸ்டாலின் பதிவு

**புதுடெல்லி, டிச.21-**



**தமிழர் நலவாழ்வுக்காகவே வாழ்ந்து மறைந்த இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாள் நேற்று முன்தினம் (19.12.2023). இந்நாளினையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ட்விட்டர் பதிவில், “கழகத்தின் கொள்கைத் தூண் - இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளில், அவரின் நீங்கா நினைவுகளை நெஞ்சிலேந்துவோம்!’’ என குறிப்பிட்டுள்ளார்.**

இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

“யாரோ சிறியர் நரியர் சூதோ வாதோ செய்திடத் துணிவரேல் பேராசிரியர் கூர்வேல் பிளக்கும்! தீராப் பிணியும் தீர்ந்து தமிழினம் பிழைக்கும்! பெரியாரின் பிள்ளைகள் நாம் பேரறிஞர் தம்பிகள் நாம் - என்றும் பிரியாத இருவண்ணக் கொடியே நாம்!” என முத்தமிழறிஞர் கலைஞர் கவிபாடிய கழகத்தின் கொள்கைத்தூண், என் வளர்ச்சிக்கு ஊக்கம் வழங்கிய பெரியப்பா, தமிழர் நலவாழ்வுக்காகவே வாழ்ந்து மறைந்த இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்தநாளில் அவரின் நீங்கா நினைவுகளை நெஞ்சிலேந்தி வணங்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### தருமபுரி மாவட்டத்தில் – பல்வேறு துறைகளின் சார்பில்

# 642 பயனாளிகளுக்கு ரூ.3.71 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மருத்துவத் துறை நிகழ்ச்சியில் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

தருமபுரி, டிச.21-

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது :-



தருமபுரி மாவட்டத்தில் இன்றைய தினம் ரூ.112.75 இலட்சம் மதிப்பீட்டில் 4 புதிய கட்டிடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டும், ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் 4 மருத்துவ திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 642 பயனாளிகளுக்கு ரூ. 3.71 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டும் உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் 108 ஆம்புலன்ஸ் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கலைஞர் காப்பீட்டுத்திட்டம் உள்ளிட்ட மருத்துவ திட்டங்கள் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. அவர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம், இதயம் காப்போம் திட்டம் போன்ற மருத்துவ திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

மருத்துவத்துறையில் கொரோனா நோய்தொற்று காலத்தில் பேரிடர் கால தடுப்பூசி பணிகள், அவசர கால தடுப்பு பணிகள், சிகிச்சை பணிகள் உள்ளிட்ட பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொதுமக்களின் மருத்துவ தேவைகளுக்காக எண்ணற்ற மருத்துவ கட்டமைப்புகளை ஏற்படுத்தி வருவதோடு, பல்வேறு மருத்துவ திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

### அண்ணா அறிவாலயம் - பேராசிரியர் இல்லம் - டி.பி.ஐ. வளாகத்தில்

# இனமானப் பேராசிரியர் திருவுருவப்படம் - திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## தலைமைக் கழகத்தின் சார்பில் மலர்மாலை அணிவித்தனர்!

சென்னை, டிச.21 -

தந்தை பெரியாரின் தொண்டராக பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக முத்தமிழறிஞர் கலைஞரின் தமையனாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தத்துவத் தலைமையாக, தன் வாழ்நாள் முழுவதும் அப்பழுக்கற்ற கொள்கைக் கோபுரமாக உயர்ந்து நின்ற இனமான பேராசிரியர் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (19.12. 2023) காலை, அண்ணா அறிவாலயத்திலும் மற்றும் சென்னை, கீழ்ப்பாக்கம், ஆஸ்பிரான் கார்டனில் உள்ள பேராசிரியர் இல்லத்திலும் வைக்கப்பட்ட இனமானப் பேரா சிரியர் திருவுருவப் படத்திற்கும் சென்னை, டி.பி.ஐ. வளாகத்தில் அமைந்துள்ள பேராசிரியர் அவர்களின் திரு வுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள “இனமானப் பேராசிரியர்” அவர்களின் படத்திற்கும், தலைமைக் கழகத்தின் சார்பில், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம் கவி, எம்.எல்.ஏ., தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ். முருகன், துறைமுகம் காஜா ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வின்போது சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு, கழக சட்டத்துறை இணைச்செயலாளர் இ.பரந்தராமன், எம்.எல்.ஏ., தேர்தல் பணிக் குழுத் தலைவர் புரசை ப.ரங்கநாதன், தலைமைக் கழக துணை மேலாளர் என்.ஜெயக்குமார், சட்டத் துறை துணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், பகுதிச் செயலாளர்கள் ஆயிரம்விளக்கு மா.பா.அன்புதுரை, அண்ணா நகர் பரமசிவம் மற்றும் நுங்கை வி. எஸ்.ராஜ், சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் டி.வி.செம்மொழி (எ) சதீஷ்குமார், பேராசிரியர் அவர்களின் மகன் வெற்றிச்செல்வன் ஆகியோருடன் பகுதி, வட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### கலைவாணர் அரங்கில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்!

# பத்திரிகையாளர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, டிச.21-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தினசரி நாளிதழ்கள், செய்தி தொலைக்காட்சிகள் மற்றும் பருவ இதழ்களில் பணி புரியும் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், முதன்மைச் செய்தியாளர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்களுக்கு சென்னை கலைவாணர் அரங்கத்தில் இன்று (21.12.2023 - வியாழக்கிழமை) காலை 08.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து நடத்தவுள்ள மாபெரும் சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாமினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இந்த மருத்துவ முகாமைத் தொடங்கி வைக்கிறார்.

இம் மருத்துவ முகாமில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இச்சிறப்பு முகாமில் Blood Investigation, ECG, Bone Mineral Density Test, Comprehensive Eye Checkup, Dental Checkup உள்ளிட்ட பரிசோதனைகள் சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், இச்சிறப்பு முகாமில் பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நோய்களை முதலிலேயே கண்டறிந்து அதற்கு உரிய சிகிச்சையினை மேற்கொள்ள உரிய ஆலோசனை வழங்கப்படும், அது தொடர்பான பரிசோதனைகளை அப்போலோ மருத்துவமனையில் சலுகை அடிப்படையில் எடுத்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்பு முகாமில் கலந்துகொள்வதற்கு பத்திரிகையாளர்கள் தங்களின் விவரங்களை 9498042409 / 9498042410 / 9600646133 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பில் உள்ள கூகுள் சீட்டில் (Google Sheet) விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

https://docs.google.com/spreadsheets/d/1yxWWsJJK-3WGTkKVjfE_ZLPPgxM1FS6n6fTADpraUtY/edit?usp=sharing

இவ்வாறு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 5வது காவல் ஆணையம்

# பொதுமக்கள் கருத்துகள் தெரிவிக்கலாம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, டிச.21-

ஐந்தாவது காவல் ஆணையத்துக்கு பொதுமக்களும் தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது-

இது குறித்து அறிவிப்பு

காவல் துறையின் பணியை செம்மையாக்கும் வண்ணம், தமிழ்நாடு அரசு 2022 ஆம் ஆண்டு 5வது காவல் ஆணையம் (Police Commission) அமைத்துள்ளது. ஐந்தாவது காவல் ஆணையம், அசோக்நகர், சென்னை, காவல் பயிற்சி கல்லூரி அலுவலக வளாகத்தில் இயங்கி வருகிறது.

காவல் பணியினை செம்மைப்படுத்த பொது மக்களிடமிருந்து கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன என்றும், நேரில் சந்தித்து மனு அளிக்க விரும்புபவர்கள் 05.12.2023 அன்று காலை 10.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை மேற்கண்ட முகவரியில் நேரிடையாக சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், ”மிக்ஜாம்” புயல் மழையினால் பொது மக்களின் கருத்துகள் நேரில் பெற இயலவில்லை. எனவே, தபால் மூலம் தெரிவிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு தபாலில் தங்களின் கருத்துகளை எழுதி அனுப்பலாம்.

முகவரி : தலைவர்,

5வது காவல் ஆணையம்,

காவல் பயிற்சி கல்லூரி வளாகம்,அசோக் நகர், சென்னை83.

மின் அஞ்சலில் அனுப்ப விரும்புவோர் கீழ்க்கண்ட மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

EMail ID: fifthpolicecommision@gmail.com

நேரில் சந்தித்து மனு அளிக்க விரும்புபவர்கள் 21.12.2023 அன்று காலை 10.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரை மேற்கண்ட முகவரியில் நேரிடையாக சமர்ப்பிக்கலாம்.

மேல் விவரங்களுக்கு கீழ்க்கண்ட கைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

கைபேசி எண் 9498155777

காவல் கண்காணிப்பாளர், 5வது காவல் ஆணையம், அசோக் நகர், சென்னை83.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரம், காரையூரில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.39.55 இலட்சம் மதிப்பீட்டில், விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டிடத்தினை, சட்டம் நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நேற்று முன்தினம் (19.12.2023) திறந்து வைத்து, விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) செல்வம், பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கன மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.10 லட்சம் மதிப்பிலான உணவு பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் ஆகியோர் அனுப்பி வைத்தனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலை, தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஒன்றியக் குழு தலைவர்கள் காமாட்சிமூர்த்தி, அரசு வழக்கறிஞர் இராம.சேயோன், மகேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது மற்றும் பலர் உள்ளனர்.